# NEWSLETTER

**MAY 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION




## Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## மாணவர்களின் சாதனைகள்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டங்களின் ஒன்றான மாணவர்களை பொறுப்பெடுத்தல் எனும் செயற்பாட்டின் மூலம் எமது உதவித்திட்டத்தில் பொறுப்பெடுக்கப்பட்டு கல்வி கற்று வந்த மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த முடிவுகளைப் பெற்றுள்ளனர்.
அதனடிப்படையில் 32 மாணவர்கள் கடந்த வருடம் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அதில் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் 3 மாணவர்கள் 3A சித்தியினைப் பெற்று எமக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் அவர்களுக்கான உதவிகளை வழங்கிய எமது அறக்கட்டளை உறவுகளின் பெயர் விபரங்கள் வருமாறு.

| நன்கொடையாளர்கள் பெயர் | மா.பெயர் | பெறுபேறு | நன்கொடையாளர்கள் பெயர் | மா.பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1. திரு.திருமதி.நிசாந்தன் சிவாஜினி | க.திரிதரன் | 3A | 4. திரு.அனோஜ் அருளானந்தம் | சுஜந்தியா | 2B, C |
| 2. திரு.இ.ஏகாம்பரம் | அ.துர்சிகா | 2A, B | 5. திரு.திருமதி.தர்மிகா பிரதீப் | நதுர்சினி | 2A, B |
| 3. திரு.திருமதி.ரேணு திரு | திலோஜினி | 3B | 6. திரு.திருமதி.பிரவீனா ஜனார்த்தன் | சாருகா | 3C |
| | கௌசல்யா | B, 2C | 7. செல்வி.ரோசிகா ராஜேந்திரன் | சியானா | 2C, S |
| | ருக்சிகா | A, B, S | 8. திரு.திருமதி.ரமணி காண்டீபன் | கேதீசா | 3C |
| | நர்மலோஜன் | 3S | 9. திரு.திருமதி.பிருந்தா சுதன்ராஜ் | பிருத்திகா | 2, C, S |
| | சிந்துஜா | C, 2S | 10. திரு.திருமதி.தீனா தம்பியையா | டனுசா | C, 2S |
| | கவிதா | 2B, C | | | |

| நன்கொடையாளர்கள் பெயர் | மா.பெயர் | பெறுபேறு | நன்கொடையாளர்கள் பெயர் | மா.பெயர் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1. திரு.லோகேந்திரா, அமெரிக்கா | தாருக்சா | 3A | 2. செல்வி.துவாரகா | சதுஜனி | 2B, C |
| | விதுஸ்கா | A, 2B | | தர்சிகா | 3A |
| | கோபிதர்சனா | A, 2B | 3. செல்வி.லோசனா | சதுர்சிகா | B, 2C |
| | தர்சா | B, C, S | | | |
| | ஜோதிகா | A, C, S | | | |
| | சகஸ்திவாணன் | B, 2S | | | |
| | சதுஜன் | B, 2C | | | |

# Top news

## கௌரவிப்பு நிகழ்வு




02.06.2024ம் திகதி யோகா தினத்தை முன்னிட்டு சிலம்பப் போட்டியில் உலக சாதனை படைத்த அன்னை ஸ்ரீ சாரதா நிலைய மாணவிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வானது திரு.பொன் பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் ஒழுங்குபடுத்தப்பட்டது, இதில் அதிதிகளாக இந்திய துணை தூதுவர் திரு.சாயி முரளி ஐயா அவர்கள், மாவட்ட செயலாளர் (காணிப்பிரிவு) முல்லைத்தீவு திரு.சி.ஜெயகாந்தன் ஐயா அவர்கள், திருமதி.சி.அகிலத்திருநாயகி அம்மா அவர்கள் மற்றும் அன்னை ஸ்ரீ சாரதா நிலைய நிர்வாகத்தினர், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் பெற்றார்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இப் போட்டியில் உலக சாதனை படைத்த 18 மாணவிகள் மற்றும் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி அடைந்த மாணவிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. இதன் போது யோகா, கராத்தே சிலம்பம் போன்ற பல்கலைகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்த நிபுணத்துவம் பெற்ற ஆசான் திரு.ஜெயம் ஜெகன் ஆசிரியர் அவர்களும் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் அதிதிகள், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்றது.

இவ்வேளை இந்திய துணை தூதரக அதிகாரிகளினால் எமது நிலையப் பிள்ளைகளுக்கு பின்வருமாறு கூறப்பட்டது ”க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தி அடைந்தவர்களை இந்திய பல்கலைக்கழகங்களில் அவர்களை இணைத்து இலவசமாக படிப்பிப்பதாக” கூறியிருந்தார்கள். இவ்வார்த்தை அனைவருக்கும் மிக சந்தோசத்தை ஏற்படுத்தியது



இந்த வேளை அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் நிரந்தர கட்டிடத்திற்கான உதவி கோரல் கடிதம் இந்திய துணை தூதரக அதிகாரி உயர்திரு சாய் முரளி ஐயாவிடம் கையளிக்கப்பட்டது. இத்துடன் நிகழ்வானது இனிதே நிறைவு செய்யப்பட்டது.

## 5ம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு மாதம் ஒரு செயற்றிட்டம்.



விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் 5வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மாதாந்தம் ஒரு செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில் ஆனி மாதத்திற்கான செயற்பாடாக பொருளாதார மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் திட்டத்தின் கீழ் ஏறாவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பலாச்சோலை என்னும் கிராமத்தில் உள்ள ஓர் பெண் தலைமை தாங்கும் குடும்ப பயனாளி திருமதி.வேலாயுதம்பிள்ளை யோகநாயகி அவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத்தொகையாக ரூபாய்.30,000 17.06.2024ம் திகதி அன்று வழங்கி வைக்கப்பட்டது.

இத் திட்டத்திற்கான உதவியினை **அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு.மதிவண்ணன்** அவர்களின் வழங்கியிருந்தார். மேலும் இதன் உப திட்டமாக சிறு சேமிப்பு திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. அந்த வகையில் எதிர்காலத்தில் இன்னும் பல பயனாளிகளையும் இணைத்துக் கொண்டு இப்பணி மேலும் வளர எமது சமுதாய அறக்கட்டளை பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது.






## இன, மத பேதமின்றி ஒன்றாய் இணைவோம்



ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்கு அண்மித்த இருவின கிராமமான "கோவில் குளம்" கிராமத்தில் உள்ள மூவின மதங்களையுடைய மக்களையும் ஒன்றிணைப்பதற்காக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைக் கொண்ட அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வானது 19.06.2024ம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுமார் 56 பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அனுசரணையாளர்களாக பிரதேச செயலக சிறுவர் நலன், மற்றும் பெண்கள் விவகார அலுவலர். மாவட்ட செயலக சிறுவர் நலன் மற்றும் பெண்கள் விவகார உத்தியோகஸ்தரும் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கலந்துரையாடல் நிகழ்வில் தங்களது குடும்ப உள்ளக பிரச்சனைகள் எதிர்கால குடும்ப வாழ்வியல் பிள்ளைகளின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடுகள் பற்றிய கருத்துக்களும் பகிரப்பட்டது.

# கிராமங்கள் தோறும் கணினிப் பயிற்சி



மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது வறுமை கோட்டின் கீழ் வாழும் பின்தங்கிய கிராமப் பிரதேச மாணவர்களுக்கான அடிப்படைக்கணினி பயிற்சி செயலமர்வுகளை தொடர் கட்டங்களாக நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் மாணவர்களுக்கான செயலமர்வானது மாவிலங்கத்துறை பிரதேசத்தில் 01.06.2024ம் திகதி இடம்பெயற்றது. மனிதநேய நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் பயிற்சி உத்தியோகத்தர் திரு.சார்ள்ஸ் கிரேஷியன் அவர்களால் இச்செயலமர்வானது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றாடல் தின கலந்துரையாடல்



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையும் இனணந்த செயற்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த 04.06.2024ம் திகதி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் எவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது என்பது பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் இதில் எமது பங்களிப்பு பற்றியும் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான செயற்பாடுகளை எமது திட்ட முகாமையாளரால் முன்னெடுக்கப்பட்டது.

## சுயதொழில் முயற்ச்சியாளர் களவிஜயம்

பொருதார மற்றத்திற்கான வலுவூட்டல் எனும் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சியாளராக தெரிவு செய்யப்பட்ட திருமதி.தங்கமலர் கணேசராஜா அவர்களுக்கான முதற்கட்ட தொகை வழங்கி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றார்.

இவருக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளாக கணக்கறிக்கைகளை ஆய்வு செய்வதற்காக Amirda நிறுவன ஊழிர்கள் மற்றும் எமது திட்ட முகாமையாளர் உள்ளிட்ட குழுவினர் 04.06.2024ம் திகதி சென்றிருந்தனர். இதன் போது அவர்களின் மாதாந்த கணக்கறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு அவர்களுக்கான மேலதிக ஆலோசனைகளும் வழங்கி வைக்கப்பட்டது.





## மாவட்ட செயலாளருடனான கலந்துரையாடல்



மாவட்ட செயலாளர் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர்களுடனான கலந்துரையாடலானது 11.06.2024ம் திகதி இடம் பெற்றது. இக் கலந்துரையாடலில் பெண்கள் மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் நோக்கில் ஆரையம்பதி கோவில்க்குள கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கான செயற்த்திட்டம் அங்குராட்பணம் செய்வது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

# வாழ்க்கைத் திறன் பயிற்சி மாணவர்களுக்கான நிகழ்வு



வாழ்க்கைத் திறன் பயிற்ச்சி மாவணவர்களுக்கான பயிற்சியின் இறுதி நாள் Presentation கொம்மாதுறை விவேகானந்த தொழில் நுட்பக் கல்லூரியில் 10.06.2024ம் திகதி சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந் நிகழ்வில் YSO நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். இப்பயிற்சிநெறியை மேற்கொண்ட 25 மாணவர்களும் கலந்து கொண்டனர்.





மாணவர்களின் காட்சிப்படுத்தல் திறன், முன்வந்து பேசும் திறன் போன்றவை வெளிப்படுத்தப்பட்டதோடு மாணவர்களிடையே ஏற்பட்ட மாற்றம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மாணவர்களை வாழ்வில் அடுத்தகட்டத்தை நோக்கி வழிநடத்துவதற்காக இப்பயிற்சி நெறியானது ஆரம்பிக்கப்பட்டது. இப் பயிற்சிநெறியின் பின்னர் இறுதியில் மாணவர்கள் அவர்களின் வாழ்க்கைப்பாதை பற்றிய திட்டங்கள் மற்றும் இப்பயிற்சிநெறியில் கற்றுக் கொண்ட விடயங்களை அனைவரின் முன்னிலையிலும் மிகத் தெளிவாக முன்வைத்தார்கள்.





# கணினி பயிற்சிநெறிக்கான களவிஜயம்

மனித நேய நம்பிக்கை நிதியத்தின் நிதி அனுசரணையுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது வெருகலில் அமைந்துள்ள துவாரகா வித்தியாலத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான அடிப்படைக் கணிணி வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகிறது. இதில் 32மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன் பிரகாரம் அப்பாடசாலையின் மேற்பார்வையைத் தொடர்ந்து மதிப்பீட்டு வகுப்பிற்கான களவிஜயத்தினை எமது திட்டமுகாமையாளர், மற்றும் ஏனைய சேவையாளர்கள் உள்ளிட்ட குழுவினர் 06.06.2024ம் திகதி மேற்கொண்டிருந்தனர். இதன் போது மேலதிகமாக மாணவர்களுக்கான கணினி வலைப்பின்னல் பயிற்சிநெறி வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கான பரீட்சையும் இடம் பெற்றது.

## தலைவர்களுக்கான பயிற்சிப்பட்டறை

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது மாதாந்தம் எமது சேவையாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியினை தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் 07.06.2024ம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் திரு.ஸ்டான்லி பிரபாகரன் அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு மிகவும் சிறப்பான முறையில் தலைமைத்துவ பயிற்சியானது நடாத்தியிருந்தார். இதில் பெண்கள் உரிமை சமந்தமான விளக்கங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் எமது நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் திட்ட முகாமையாளர் உட்பட எமது சேவையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.



## பொறுப்பெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான களவிஜயம்

மாணவர் மாற்றத்திற்கான வலுவூட்டல் திட்டத்தின் மூலம் எம்மால் பொறுப்பெடுக்கப்பட்ட மாணவர்களை பார்வையிட மட்/ஆரையம்பதி/இராமகிருஷ்ண வித்திாலயம் பாடசாலைக்கு 11.06.2024 அன்று எமது திட்ட முகாமையாளர் மற்றும் எமது அறக்கட்டளையின் கள சேவையாளர்களும் சென்றிருந்தனர். இதன் போது பாடசாலை அதிபரிடமும் மாணவர்கள் பற்றிய விபரங்களும் திரட்டப்பட்டது.





## நன்கொடையாளரின் 25ம் ஆண்டு நிறைவுவிழா

எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சமூக மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்பாடுகளின் தொடர் நன்கொடையாளராகக் கடந்த 4 வருடங்களிற்கும் மேலாக எமக்கு உறுதுணையாக பயணித்துக்கொண்டிருக்கும் மனித நேய நம்பிக்கை நிதியத்தின் 25 ஆண்டு நிறைவு விழாவானது கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் 22.06.2024ம் திகதி இடம்பெற்றது.

2021 ஆம் ஆண்டு எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் செயற்பாடுகளுடன் இணைந்து வெள்ள நிவாரணம் மற்றும் மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கான உதவிகளை வழங்கியதுடன் எமது செயற்பாடுகளைக் கண்காணித்து ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் நாம் உதவி கோரும் போது உடனடியாகவே தமது ஒத்துழைப்பை வழங்கி மட்டக்களப்பு தொடக்கம் முல்லைத்தீவு வரையான எமது அனேகமான செயற்பாடுகளுக்கும் உதவிகரம் நீட்டியதுடன் இளைஞர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்பாட்டின் ஒரு பிரிவாக எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் கணினிப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்விற்கான நிகழ்வுகளை கருத்திற் கொண்டு இன்றைய காலகட்டத்தின் தேவையினை உணர்ந்து முல்லைதீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மாணவர்களுக்கு அடிப்படைக் கணினி பயிற்சி வழங்கும் செயற்பாட்டினை எம்முடன் இணைந்து ஆரம்பித்து தற்போது பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கணினி பற்றிய அடிப்படை அறிவினை வழங்க வித்திட்டது.




## தொழில் வழிகாட்டல் காட்சிப்பலகை வழங்கல்




க.பொ.த சாதாரண தரம் சித்தியடையாத மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டமான தொழில்முறை பிரிவு எனும் பாடத்தெரிவு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தாழங்குடா விநாயகர் வித்தியாலயம் பாடசாலையினரின் கோரிக்கைக்கிணங்க காட்சிப்பலகையானது 12.06.2024ம் திகதி வழங்கப்பட்டது.

இக்காட்சிப்பலகை 7வகையான பாடத்தெரிவு கொண்டதாக 28 தொழில்த்துறை பாடவிதானங்களை உள்ளடக்கியுள்ளது. இந்நிகழ்வில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் மற்றும் எமது கள சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.



## முதன்மை பாலர் பாடசாலைக்கான களவிஜயம்

சிறுவர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து அவர்களுக்கான உதவிகளை நாம் வழங்கி வருகின்றோம் அந்த வகையில் மாதாந்த கணக்கறிக்கைகளை பார்வையிடுவதற்காக 18.06.2024ம் திகதி களவிஜயம் மெற்க்கொள்ளப்பட்டது. இதன்போது மாதாந்த கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டதோடு அவர்களுக்கான ஆலோசனைகளும் எமது கணக்காளரால் வழங்கப்பட்டது.

## பெண்களுக்கான அடுத்தகட்ட நிகழ்வு

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான இரண்டாவது தொடர் அமர்வானது 24.06.2024ம் திகதி கோவில் குளத்திலுள்ள "சகரம் மையத்தில்" நடைபெற்றது. இந்நிகழ்வில் குடும்ப தலைமை பொறுப்புகளை ஏற்று வழிநடத்துகின்ற பெண்களுக்கான திறன் ஆய்வு விருத்தி கருத்து பரிமாறல்கள் இடம்பெற்றது. அந்தவகையில் ஒவ்வொருவரும் தத்தமது திறன்கள் தொடர்பாக பகிரப்பட்டதோடு எதிர்காலத்தில் அவர்கள் இந்த திறன்களின் ஊடாக குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அயராத முயற்சியில் ஈடுபடவும் முன் வந்தமை குறிப்பிடத்தக்கது, மேலும் இந்நிகழ்வில் பிரதேச செயலக துறைசார் ஊழியர்கள் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது, மேலும் பிள்ளைகளின் எதிர்கால கணனி, ஆங்கில கற்றல் தொடர்பாகவும் கருத்துக்களையும் முன் வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





## வாழ்வாதார உதவி பெறும் குடும்பத்திற்கான களவிஜயம்

பொருளாதார மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் உதவி பெற்ற திரு.பாஸ்கரன் குடும்த்தினை 20.06.2024ம் திகதி மேற்பார்வை செய்யபப்பட்டது. இதன்போது அவர்களின் தற்போதைய நிலை பற்றியும் அறிந்து கொண்டு அவர்களுக்கான மேலதிக ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.





## புகலிட மாணவர்களுடனான சந்திப்பு

விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியில் வாழ்க்கைத்திறன் பயிற்ச்சிநெறியினைக் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான களவிஜயமானது 26.06.2024ம் திகதி இடம்பெற்றது.

எமது திட்ட பிரதேசமான ஆரையம்பதியில் காணப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான நிலையமான புகலிடத்திற்கான களவிஜயம் மேற்க்கொள்ளப்பட்டது.

இதன்போது மாணவர்களும் அங்க காணப்படும் சிறார்களுடன் இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் அவர்களுடன் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டனர்.

## ஆலங்குளம் பாடசாலை களவிஜயம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக காணப்படும் ஆலங்குளம் அ.த.க. பாடசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க 17.06.2024ம் திகதி விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் மற்றும் கள சேவையாளர்கள் ஆலங்குளம் கிராமத்திற்கான களவிஜயத்தை மேற்கொண்டிருந்தனர். பாடசாலை நிர்வாகத்தினரின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலங்குளம் கிராமம் பற்றியும் எமது பங்களிப்பு பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.



## தலைவர்களுக்கான பயிற்சிப்பட்டறை




விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது மாதாந்தம் எமது சேவையாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியினை தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் 28.06.2024ம் திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் திரு.ஸ்டான்லி பிரபாகரன் அவர்களால் இரண்டாம் தலைமைத்துவப் பயிற்ச்சியானது மிகவும் சிறப்பான முறையில் நடாத்தியிருந்தார். இதில் முரண்பாடுகள் சமந்தமான விளக்கங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திட்ட முகாமையாளர் உட்பட எமது சேவையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஆனி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.





மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்





